### பள்ளிக்கல்வித் துறை சார்பில்

# 22 மாணவ - மாணவியர் கல்விச் சுற்றுலா!

## ஜெர்மன் செல்கின்றனர்!

சென்னை, மே 25-

2022-2023ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பள்ளி அளவில் கல்வி மற்றும் இணைச் செயல்பாடுகளான மன்றச் செயல்பாடுகள், நூல் வாசிப்பு, நுண் கலைகள், விளையாட்டு மற்றும் அறிவியல் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் மாணவர்கள் உலக அளவிலும் தேசிய/மாநில அளவிலும் புகழ்பெற்ற இடங்களுக்குக் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுவர் என அறிவிப்பு வெளியிட்டார்கள்.

அவ் அறிவிப்பிற்கு இணங்க 2022-2023 ஆம் கல்வி ஆண்டில் அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் முதல் 9 வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் நடைபெற்ற 4 மன்றப் போட்டிகளில், ஒவ்வொரு மன்றத்திற்கும் 25 மாணவர்கள் வீதம் வெற்றியாளர்களாகத் தேர்ந்தேடுக்கப்பட்டனர்.

இம்மாணவர்களைப் பாராட்டும் வகையிலும் மற்றும் அவர்கள் அறிவை விரிவு படுத்தும் நோக்கத்திலும், தமிழக அரசால் 3 கோடி செலவில் வெளிநாட்டு கல்விச்சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர்.

ஒவ்வொரு மன்ற வெற்றியாளர்களும் மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான் மற்றும் தென்கொரியாவுக்குச் சென்று தங்கள் பயணங்களிலிருந்து விரிவான அனுபவத்தையும் அறிவையும் பெற்றனர். நுண்கலை மற்றும் விளையாட்டில் சிறந்து விளங்கிய மாணவர்களும் அவ்வாறே அழைத்துச் செல்லப்பட்டனர். மன்ற வாரியாக வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்ட மாணவர்கள் எண்ணிக்கை விவரம் பின்வருமாறு.

மன்றங்கள்/மாணவர்கள் எண்ணிக்கை/

கல்விச்சுற்றுலா சென்ற நாடு/

இலக்கிய மன்றம் - 25-சிங்கப்பூர்,வினாடி வினா மன்றம்-25-தென் கொரியா, வானவில் மன்றம்-25-தென் கொரியா, சிறார் திரைப்பட மன்றம்-24-தென் கொரியா, கலைத்திருவிழா-21- மலேசியா, விளையாட்டு-22-ஜப்பான்.

2023-2024ஆம் ஆண்டுக்கான அரசு நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 6 முதல் 9 வகுப்பு மாணவர்களுக்குப் பள்ளி அளவில் மன்றச் செயல்பாடுகளில் போட்டிகள் நடத்தப்பட்டு மாவட்ட அளவிலான மன்றப் போட்டிகள் 14.02.2024 முதல் 16.02.2024 வரை நடத்தப்பட்டது. மாநில அளவிலான மன்றப் போட்டிகள் 27.02.2024 முதல் 14.03. 2024 வரை நடத்தப்பட்டன.

முதற்கட்டமாக மாநில அளவில் போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களில் 20 மாணவ/மாணவியர்கள், தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியை ஒருவரும் மற்றும் அலுவலர் ஒருவரும் 22.08.2024 முதல் 27.08.2024 வரை ஹாங்காங் நாட்டிற்கு கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர். 23.12.2024 அன்று முதல் 27.12.2024 வரை 42 மாணவர்கள், 3 அலுவலர்கள் மற்றும் தேசிய நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் ஒருவரும் சிங்கப்பூர் நாட்டிற்கு அழைத்து செல்லப்பட்டனர். 23.02.2025 முதல் 28.02.2025 முடிய 52 மாணவ / மாணவிகள் மற்றும் 4 ஆசிரியர் / அலுவலர்கள் என மொத்த 56 நபர்கள் மலேசியா நாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

தற்போது, 24.05.2025 முதல் 28.05.2025 வரை 22 மாணவ / மாணவிகள் மற்றும் 2 ஆசிரியர் / அலுவலர்கள் என மொத்தம் 24 நபர்கள் ஜெர்மன் நாட்டிற்கு அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

கல்விச் சுற்றுலாவின் போது இக்குழு பார்வையிட உள்ள முக்கிய இடங்கள்

- Munich – City Tour
- Munich– University Visit
- Munich–BMW Museum–Dachau Concentration Camp–Deutsches Museum
- Munich–Swarovski Crystal worlds–Hungerburg Funicular.

இவ்வாறு பள்ளிக் கல்வித்துறை தெரிவித்துள்ளது

---

### சட்டபூர்வமாகச் செயல்பட வேண்டிய

# அமலாக்கத்துறையை வைத்து அரசியல் செய்வதா?

## “தினகரன்” நாளேடு தலையங்கத்தில் கண்டனம்

சென்னை, மே 25-

சட்டப்பூர்வமாக செயல்பட வேண்டிய அமலாக்கத் துறையை பயன்படுத்தி அரசியல் செயவதும், அரசின் கைப்பாவையாக அமலாக்கத்துறை செயல்படுவதும், அத்துறைக்கு அழகும் அல்ல, சட்டப்படி ஏற்கத்தக்கதும் அல்ல என “தினகரன் நாளேடு தலையங்கத்தில் கண்டனம் தெரிவித்துள்ளது.



தினகரன்

மே 24, 2025 சனிக்கிழமை

மீண்டும் குட்டு

ஒன்றிய அரசின் கைப்பாவையாக செயல்பட்டு, எதிர்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் தேவையற்ற பதற்றங்களையும், குழப்பத்தையும் ஏற்படுத்துவதும், பாஜ அரசை விமர்சிக்கும் அரசியல் கட்சிகள், ஆளுமைகளை அமலாக்கத்துறை மற்றும் சிபிஐ, என்ஐஏ போன்ற ஒன்றிய அரசின் புலனாய்வு துறைகளை ஏவி விட்டு விசாரணை, சோதனை என்ற பெயரில் முடக்கி நாட்டில் எதிர்கட்சிகளே இல்லாமல் ஆக்கும் பாசிச செயலில் ஒன்றிய அரசு ஈடுபட்டு வருகின்றது.

சிபிஐ அல்லது இதர புலனாய்வு அமைப்புகளால் வழக்குப்பதிவு செய்யப்பட்ட பிறகு, அதன் அடிப்படையில் மட்டுமே அமலாக்கத்துறையால் வழக்குப்பதிவு செய்ய முடியும் என்ற நிலை முன்பு இருந்தது. இந்த நிலை இருக்கும் வரை அமலாக்கத்துறை அத்துமீறல் இல்லாமல் ஓரளவு நேர்மையாக செயல்பட்டு வந்தது.

ஆனால் 2019ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திருத்தங்களானது அமலாக்கத்துறைக்கு அளவில்லா அதிகாரத்தையும், சுதந்திரத்தையும்

அது வருமாறு:-

ஒன்றிய அரசின் கைப்பாவையாக செயல்பட்டு, எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் தேவையற்ற பதற்றங் களையும், குழப்பத்தையும் ஏற்படுத்துவதும், பா.ஜ. அரசை விமர்சிக்கும் அரசியல் கட்சிகள், ஆளுமைகளை அமலாக்கத் துறை மற்றும் சி.பி.ஐ., என்.ஐ.ஏ. போன்ற ஒன்றிய அரசின் புலனாய்வு துறைகளை ஏவி விட்டு விசாரணை, சோதனை என்ற பெயரில் முடக்கி நாட்டில் எதிர்க்கட்சிகளே இல்லாமல் ஆக்கும் பாசிச செயலில் ஒன்றிய அரசு ஈடுபட்டு வருகின்றது.

சி.பி.ஐ. அல்லது இதர புலனாய்வு அமைப்புகளால் வழக்குப்பதிவு செய்யப்பட்ட பிறகு, அதன் அடிப்படையில் மட்டுமே அமலாக்கத்துறையால் வழக்குப்பதிவு செய்ய முடியும் என்ற நிலை முன்பு இருந்தது. இந்த நிலை இருக்கும் வரை அமலாக்கத் துறை அத்துமீறல் இல்லாமல் ஓரளவு நேர்மையாக செயல்பட்டு வந்தது. ஆனால் 2019ம் ஆண்டு கொண்டு வரப்பட்ட திருத்தங்களானது அமலாக்கத்துறைக்கு அளவில்லா அதிகாரத்தையும், சுதந்திரத்தையும் வழங்கியது.

கட்டுப்பாடற்ற சுதந்திரம் என்பது ஆபத்தானது. மற்றவர்களின் உரிமைகளை மீறி சமூகத்தில் குழப்பங்களையும், எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்தும் என்பதற்கு உதாரணமாக இன்றைக்கு அமலாக்கத்துறையின் செயல்பாடுகள் அமைந்துள்ளது. தமிழ்நாட்டில் கடந்த 2023ம் ஆண்டு மதுரை அமலாக்கத் துறை அலுவலகத்தில் லஞ்சம் வாங்கிய புகாரில், அமலாக்கத் துறை அதிகாரி அங்கித் திவாரி என்பவர் கைது செய்யப்பட்டார். இதே போல கடந்த 5 நாட்களுக்கு முன்பு கேரள தொழிலதிபர் ஒருவரிடம் இடைத்தரகர்களை நியமித்து ரூ.2 கோடி லஞ்சம் வாங்க முயன்றதாக அமலாக்கத் துறை அதிகாரி மீது அம்மாநில ஊழல் தடுப்புப் பிரிவு போலீசார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். நாட்டில் நடக்கும் ஊழல்களை விசாரிக்கும் அளவுக்கு தங்களை நேர்மை கொண்ட விசாரணை அமைப்பாக காட்டிக்கொள்ளும் அமலாக்கத்துறை தான் இது போன்ற லஞ்ச ஊழல்களில் சிக்கி கேலிக்கூத்தாக்கி வருகின்றது.

அமலாக்கத்துறை விசாரிக்கும் பெரும்பாலான வழக்குகள் குற்றம் புரிந்ததற்கான ஆவணங்களை திரட்டி, குறிப்பிட்ட காலத்திற்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து, குற்றங்களை நிரூபித்து தண்டனை வாங்கி கொடுத்தது என்பது விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் தான் உள்ளன. அமலாக்கத்துறையின் அதிகார அத்துமீறல்களை அவ்வப்போது உச்சநீதிமன்றம் கண்டித்து வருகின்றது. இந்த சூழலில் தான் டாஸ்மாக் வழக்கில் தமிழக அரசு தாக்கல் செய்த மேல்முறையீட்டு வழக்கில் அமலாக்கத் துறை சோதனைக்கு தடை விதித்துள்ளதோடு டாஸ்மாக்கில் ரெய்டு நடத்தியது வரம்பு மீறிய செயல் எனவும், கூட்டாட்சி தத்துவத்தை சிதைத்து விட்டதாகவும் அமலாக்கத்துறைக்கு உச்சநீதிமன்றம் மீண்டும் குட்டு வைத்துள்ளது.

மேலும் அமலாக்கத்துறையானது தனது அதிகார எல்லையை மீறி உள்ளதோடு, முறைகேடு நடந்தது என்றால் சம்பந்தப்பட்ட தனிநபர்களுக்கு எதிராக வழக்கு பதிவு செய்து, விசாரணை நடத்தாமல் எந்த மூல வழக்கின் அடிப்படையில் அமலாக்கத்துறை நடவடிக்கை எடுத்தது எனவும், ஒட்டுமொத்த அரசு நிறுவனத்தையும் எப்படி விசாரிக்க முயற்சிக்கலாம் என கண்டனம் தெரிவித்துள்ளது. ஆரோக்கியமான அரசியலை செய்வது, எதிர்க்கட்சிகளை விமர்சிப்பது என்பது பா.ஜ. போன்ற அரசியல் கட்சிகளுக்கு அவசியம் தேவையான ஒன்று. ஆனால் சட்டபூர்வமாக செயல்பட வேண்டிய அமலாக்கத் துறையை பயன்படுத்தி அரசியல் செய்வதும், அரசின் கைப்பாவையாக அமலாக்கத்துறை செயல்படுவதும், அரசியல் செய்வதும், அத்துறைக்கு அழகும் அல்ல, சட்டப்படி ஏற்கத்தக்கதும் அல்ல.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பேருந்து சாலைகள் துறை**

பே.சா.து.ந.க.எண்.பி4/1312/2025

**இரண்டு உறை குறுகிய கால மறு மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் பே.சா.து அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட, மண்டலம் - 6, 8, 10 & 13 மண்டலத்தில் உள்ள 68 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளில் தார் சாலைகள், சிமெண்ட் கான்கிரீட் சாலைகள், மற்றும் இன்டர்லாக் பேவர் பிளாக் சாலைகள் அமைக்கும் பணி சிப்பம் - 17, 18 & 30 (SPECIAL FUND 2025 - 26)**

பணியின் உத்தேச தொகை : **குறைந்தபட்சம் ரூ.221.00லட்சம் அதிகபட்சம் ரூ.233.00 லட்சம்**

முன்வைப்பு தொகை : மொத்த பணியின் உத்தேச தொகையில் **1%**

**ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : 06.06.2025 அன்று மாலை 3.00 மணி வரை**

**ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்: 06.06.2025 அன்று மாலை 3.30 மணி**

மேலும் விவரங்களுக்கு **www.tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 2551 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — **கண்காணிப்பு பொறியாளர் / பே.சா.து**



தமிழ்நாட்டில் உயர் கல்விக்கு

**கணினி ஒரு தடையாக இருந்துவிடக்கூடாது!**

கல்லூரி மாணவர்களுக்கு இலவச லேப்டாப் டெண்டர்!





# பொள்ளாச்சி தீர்ப்பு நீதிபதிக்கு திராவிட வணக்கம்!

பெண்களுக்கு கல்வி அவசியம். பெண் ஆணுக்கு அடிமையில்லை. பிள்ளை பெறும் இயந்திரம் அல்ல பெண். அரசுப் பணிகளில் பெண்கள் சேர்க்கப்பட வேண்டும். பெண்களுக்கு சொத்தில் சமபங்கு தரப்பட வேண்டும், பெண்ணுரிமை காக்கப்பட வேண்டும் என காங்கிரஸ் கட்சியில் இருந்த காலத்திலும் அதற்குப் பின்பும் 1925க்கு பிறகு நீதிக்கட்சித் தலைவராக ஆனதற்குப் பின்பும் அறிஞர் அண்ணா அவர்களின் சிறப்புத் தீர்மானமாக திராவிடர் கழகமாக மாற்றப்பட்ட பின்பும் ஏன் சுயமரியாதை இயக்கம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து வலியுறுத்தி குரல் கொடுத்து வந்தவர் திராவிட இயக்கத் தந்தை தந்தைபெரியார் அவர்கள் தான்.

அவர் எண்ணத்திற்கு வடிவம் தந்தது 1967ல் அறிஞர் அண்ணா ஆட்சியில் அமர்ந்த பின் சுயமரியாதை திருமணத்திற்கு சட்ட வடிவம் தந்தார். அதன்பின் முதல்வரான தலைவர் கலைஞர் அவர்கள் தந்தை பெரியாரின் சிந்தனைகளுக்கு செயல்வடிவம் தந்த வண்ணம் இருந்தார். இலவச கல்வி, பள்ளிப்படிப்பு, கல்லூரிப்படிப்பு வரை நீட்டித்துக் கொடுத்தார். 1929 மாநாட்டில் தந்தை பெரியார் பெண்களுக்கு சொத்தில் சமபங்கு வேண்டும் என்றதை 1989ஆம் ஆண்டு கலைஞர் ஆட்சியில் அமர்ந்த பின் நிறைவேற்றிக் காட்டினார்.

உள்ளாட்சித் தேர்தலில் பெண்களுக்கு இடஒதுக்கீடு தந்ததோடு மட்டுமின்றி வேலைவாய்ப்புகளிலும் இடஒதுக்கீடு பெண்களுக்குத் தந்தார். முதல் ஆதிதிராவிடர் சமுதாயத்தைச் சேர்ந்த வரதராஜன் என்பவரை உயர் நீதிமன்ற நீதிபதியாக ஆக்கினார் கலைஞர் அவர்கள். பின்பு அவர் உச்சநீதிமன்ற நீதிபதியாக உயர்வு பெற்றார். இதே போல் பல பெண்கள் நீதிபதிகளாக கீழமை நீதிமன்றங்களில் அமர்ந்து நீதி வழங்கிட வழிவகுத்தார். இப்படி கலைஞர் பெண்களுக்கு செய்ததை மிகப்பெரிய பட்டியலே போடலாம்.

தாய் எட்டடிப் பாய்ந்தால் குட்டி பதினாறு அடிபாயும் என்பதை மெய்ப்பிக்கும்வண்ணம் இன்றைய திராவிட மாடல் அரசின் முதல்வர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பதவியேற்றப் பின் பெண்களுக்கு செய்ததோ கணக்கிலடங்காதது.

பெண்களுக்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகையாக மாதம் ஆயிரம் ரூபாய் ஒரு கோடியே பதினைந்து லட்சம் பேருக்கு தந்து கொண்டிருக்கிறார். மேலும் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கலாம் அவர்களுக்கும் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என்று துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார். உள்ளாட்சி அமைப்புகளில் 50 விழுக்காடு பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.



**வி.பி.கலைராஜன்**

கழக இலக்கிய அணி செயலாளர்

பள்ளிக் கல்வியைப் படித்து முடித்தப் பின் கல்லூரி படிப்புக்கு பெண் பிள்ளைகளை அனுப்புவதை பெரும்பாலான பெற்றோர்கள் விரும்பாமல் திருமணம் செய்து வைப்பதையே செய்தனர். அந்தப் பெண் குழந்தைகள் கல்லூரி கல்விக் கற்க முடியவில்லையே என்ற ஏக்கத்தோடே இருந்தனர்.

இதையெல்லாம் நன்குணர்ந்த நம்முதல்வர் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் படித்த மாணவிகள் கல்லூரி கல்விக் கற்க மாதம் ஆயிரம் மற்றும் ரூபாய் நோட்டு, புத்தகங்களும் வழங்குகிறார். அதோடு மட்டுமின்றி நான் முதல்வன் திட்டம் மூலம் 42 லட்சம் மாணவச் செல்வங்களுக்கு தொழில்திறன் பயிற்சியும் வழங்கிட ஏற்பாடு செய்துள்ளார். இதனால் சில லட்சம் பேர் வேலையில் சேர்ந்துள்ளனர். இதுவரை புதுமைப்பெண் திட்டம் மூலம் 9 லட்சம் மாணவிகள் பயனடைந்துள்ளனர். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் 47 விழுக்காடு பெண்கள் தொழிலாளர்களாகப் பணிபுரிந்து முதலிடத்தில் உள்ளனர். மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குக் கடன் 12 லட்சத்திலிருந்து 20 லட்சமாக உயர்த்தி உத்தரவிட்டுள்ளார். சத்துணவு கூடங்களில் சமையல் உதவியாளர் ஓய்வு வயதை 60 ஆக உயர்த்தி உள்ளார். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தடுப்பு நடவடிக்கையில் இந்திய அளவு சராசரியை விட தமிழ்நாடு அதிகம்.

காவல்துறையில் பெண்கள் அதிகமாக உள்ளனர். 39 புதிய மகளிர் காவல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உயர் அதிகாரிகள் பலர் பெண்களாக உள்ளனர். விடியல் பயணம் மூலம் தினமும் 50 லட்சம் பெண்கள் பயணிக்கின்றனர். 682.02 கோடி பயணங்கள் இதுவரை நடந்தேறியுள்ளது. 27 இடங்களில் பெண்கள் தங்கிப் பணிபுரிய தோழி விடுதிகள் கட்டித் தரப்பட்டுள்ளது. சென்னை, கோவை, மதுரையில் தலா 1000 மாணவியர் விடுதி கட்டித்தரப்பட்டுள்ளது. ஆலயங்களில் 11 பெண்கள் ஓதுவார்களாகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். விளையாட்டு வீராங்கனைகளுக்கும் ஊக்கத் தொகையும் உபகரணங்களும் தக்கப் பாதுகாப்பும் வழங்கப்படுவதால் இந்திய மற்றும் சர்வதேச போட்டிகளில் வெற்றி பெற்றுத் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்து வருகின்றனர். பெண்களுக்கு 40... வேலைவாய்ப்புகள் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. மகப்பேறு விடுப்பு 9 மாதங்களுக்கு பதில் 12 மாதம் என 2021ல் அறிவிக்கப்பட்டது.

இப்படி பெண்களுக்கு பாதுகாப்பான மாநிலமாக தற்போது திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு திகழ்ந்து வருவது உலகம் அறிந்தது. அப்படிப்பட்ட தமிழ்நாட்டின் கடந்த கால ஆட்சியில் 2019ல் பொள்ளாச்சியில் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு மிரட்டியும், அடித்தும் காரில் தூக்கிச் சென்றும் ஆளாக்கப்பட்டுள்ளனர். இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் அப்படி ஆளாக்கப்பட்டுள்ளனர் என்றும் ஆயிரத்துநூறு வீடியோக்கள் உள்ளன என்றும் கூறப்படுகிறது.

இதில் சில முக்கிய அரசியல் புள்ளிகள் தலையீடும் இருந்துள்ளதாக சந்தேகிக்கப்படுகிறது. அதனால் இதனை விசாரித்து குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று தொடர்ந்து தி.மு.க தலைவர் தளபதி மற்றும் சில முக்கிய அரசியல் கட்சித் தலைவர்கள், ஜனநாயக மாதர் சங்கம், நக்கீரன் பத்திரிகை ஆசிரியர் சகோதரர் கோபால் மற்றும் நிருபர்கள் என பலரும் விடாமல் வலியுறுத்தி வந்தனர். இதில் நக்கீரன் கோபால் அவர்களை இந்த விஷயத்தில் தலையிடக் கூடாதென்றும் ஒதுங்கி விட வேண்டுமென்றும் சில அரசியல் புள்ளிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

புலவர் நக்கீரன் புராணப்படி கடவுளையே நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே என்று அஞ்சாமல் முழக்கமிட்டவர். நம்புகிறவர்கள் இதை நம்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள் நம்மைப் போன்றவர்களுக்கும் அது கற்பனைக் கதையாகவே தெரிகிறது. அதற்குள் செல்ல விரும்ப வில்லை. அந்த நக்கீரன் பெயரில் பத்திரிகை நடத்தும் சகோதரர் கோபால் மிரட்டலுக்கு பயப்படுவாரா? அவர் கலைஞரின் செல்லத்தம்பி, பத்திரிக்கையுலகில் சிங்கக்குட்டி தெரியாமல் சிங்கத்தை சீண்டி விட்டார்கள். பிறகென்ன தீர்ப்பிலிருந்து சிலர் தப்பித்து இருப்பவர்களையும் தண்டனைக்கு ஆளாக்காமல் விடமாட்டேனென தூக்கத்தைத் தொலைத்து விட்டு தமிழ்நாட்டுக்கு இழிவை ஏற்படுத்தியவர்களை ஒருவரையும் தண்டிக்காமல் விடக்கூடாதென்று துணிவுடன் பணியாற்றி வந்தார்.

தமிழக முதல்வர் எதிர்க்கட்சித் தலைவராக இருந்து பொள்ளாச்சி சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் தர வேண்டும் கழகம் அவர்களுக்கு துணை நிற்கும். உண்மைக் குற்றவாளிகள் தண்டிக்கப்படும் வரை ஓயமாட்டேன் என்று போராடியது பாதிக்கப்பட்டப் பெண்களை புகார் கொடுக்க துணிச்சலைத் தந்தது என்பதை மறுக்க முடியாது. புகார் கொடுத்தும் பல நாட்கள் குற்றவாளிகளை அன்றைய அ.தி.மு.க. அரசு கைது செய்யவில்லை. விசாரணை அதிகாரிகள் கக்கன் பேத்தி ராஜேஸ்வரி, நிஷா பார்த்திபன், எஸ்.பி.பாண்டியராஜன் குற்றவாளிகளைப் பிடிக்கச் சொன்னவர்களை தனியாக அழைத்து விலகி விடும்படி மிரட்டி யுள்ளனர். இது நக்கீரன் கோபால் கூறியது.

பிப்ரவரி 24-2019 அன்று பாதிக்கப்பட்ட மாணவி புகார் கொடுத்தார். பொள்ளாச்சி கிழக்குப் போலீஸ் ஸ்டேஷன் உடனடி நடவடிக்கை எடுத்ததா என்றால் இல்லை. பின்னர் நடந்த போராட்டங்களின் பின்பு தான் திருநாவுக்கரசு, சபரி ராஜன், சதீஷ், வசந்தகுமார் ஆகியோர் மீது 13 பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு இந்த விபரம் வெளிவந்தது.

சின்னம்பம்பாளையத்தில் உள்ள திருநாவுக்கரசு (முதல் குற்றவாளி) தோட்டத்து வீட்டிற்கு அழைத்து சென்று தனிமைப்படுத்தி ஆபாச வீடியோ எடுத்து நண்பர்களோடு சேர்ந்து பாலியல் வன்கொடுமை செய்துள்ளனர். சட்ட விதிகள் 313ன் கீழ் கைதான 9 பேரிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. 50க்கும் மேற்பட்ட அரசுத் தரப்பு சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

இதற்கிடையில் புகார் கொடுத்த எட்டுப் பெண்களின் சகோதரர்கள் குற்றவாளிகள் கும்பலால் தாக்கப்பட்டுள்ளனர். அது தனி வழக்கு. சி.பி.சி.ஐ.டி வழக்கைச் சரியாக நம்பகத்தன்மையோடு நடத்தாத காரணத்தால்தான் சி.பி.ஐக்கு வழக்கு மாற்றப்பட்டது. அதன் பின்னர் தான் ஹேரேன்பாபு, பைக் பாபு, அருளானந்தம், அருண்குமார் ஆகிய நால்வர் 2021 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டனர். ஆறு ஆண்டுகள் இந்த வழக்கு நடந்தது.

இறுதியில் கோவை சி.பி.ஐ நீதிமன்றத்தில் நடந்த வழக்கில் 48 சாட்சிகளில் ஒருவர் கூட பிறழ் சாட்சியாக மாறவில்லை. இது தி.மு.க தலைவர் கொடுத்த தைரியமே முக்கியக் காரணம். அரசு ஆதரவு இருந்தால் அம்மிக்கல் கூட உயரச் சென்று எதிரியின் உச்சந்தலையை உடைக்கும். அப்படியிருக்க சாட்சிகள் மட்டும் பயப்பட மாட்டார்களா என்ன? ஆனால் யாரும் பயப்படவில்லை.

நீதிபதி நந்தினிதேவி அவர்கள் தெளிவாக விசாரித்துத் தீர்க்கமாக முடிவெடுத்து இனி ஒரு பொள்ளாச்சி சம்பவம் போன்று தமிழ்நாட்டில் எங்கும் நடக்கக்கூடாதென்று உறுதியான உச்சமான தண்டனையை குற்றவாளிகளுக்கு தந்துள்ளார். ஆம் சாகும் வரை அனைவருக்கும் ஆயுள் தண்டனை.

நிச்சயம் கொடுக்கப்பட்டது நல்ல தீர்ப்பு என்று பாராட்டியவர்கள் பல கோடி பேர். பூரித்தப் பெண்கள் எழுத முடியாத எண்ணிக்கை. இதற்காகக் கண்ணீர் வடித்தவர்கள் கணக்கிலடங்கா!

எது என்னவோ தமிழ்நாட்டிற்குப் பாவிகள் அழியாத அவப்பெயரை ஏற்படுத்திவிட்டார்கள். ஆனால் ஒன்று ‘‘**அண்ணா பெல்டால் அடிக்காதீங்க**’’ ‘‘**டேய் உன்னை நம்பி தானே வந்தேன் இப்படி செய்கிறாயே**’’ ‘‘**அண்ணா என்னை விட்டுடுங்கண்ணா**’’ என்ற அந்தப் பெண்களின் கதறல் மட்டும் காதில் ஒலித்துக் கொண்டே பெரும் வலியை தந்து கொண்டிருந்தது. நம்முதல்வர் அவர்களுக்கும் இப்படித்தான் வலிக்கும் ஏனென்றால் தன் மக்களை நேசிக்கும் மாமனிதர் அவர். தீர்ப்பு தந்த நியாயத்தராசு நீதிபதி நந்தினிதேவி அவர்களுக்கு மீண்டும் ஒரு பெரு வணக்கம்.

**‘‘கார்கள் வைத்தே அழைப்பாங்க**
**கடற்கரைக்கு இனிக்கப்பேசி இழுப்பாங்க**
**காரியத்துக்காக காலில்கூட விழுவாங்க**
**அய்யகோ பெண்களே இனிமேல்தேவை**
**எச்சரிக்கையே!**
**வேலுநாச்சியார் வீரத்தை மனதில்நினையுங்கள்**
**தமிழக அரசும் அன்புமுதல்வரும் அரணாய்**
**இருப்பர்.’’**